## திராவிட மாடல் அரசு மகளிருக்குத் துணை நிற்பது போல்

# மகளிரும் இந்த அரசிற்குத் துணையாக நில்லுங்கள்!

## ஆர்.கே.நகர் அச்சீவர்ஸ் அகாடமி திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, ஜூலை 6 –

ஆர்.கே.நகர் அச்சீவர்ஸ் அகாடமி திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

நான் வெளியூர் செல்லும்போதெல்லாம் எனக்கு தலைவரின் அறிவுரை ஒன்று உணடு. 'தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் அங்கு இருக்கின்ற மகளிர் சுயஉதவிக்குழு சகோதரிகளை வரச்சொல்லி, அவர்களுடன் பேசி அவர்களின் குறைகளைக் கேட்டு, அவர்களுக்கு நாம் வேறு என்ன செய்ய முடியும்?' என்பதுதான் முதலமைச்சரின் உத்தரவு.

### சிறப்பான பணி

அதன்படி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை எங்கு சென்றாலும், அங்கு இருக்கின்ற மகளிர் சுயஉதவிக்குழுச் சகோதரிகளை அழைத்து, அவர்களின் தேவைகளை உடனுக்குடன் நம் முதலமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்யச் சொல்லி இருக்கிறார். அந்த வகையில், இன்றைக்கு ஆர்.கே. நகருக்கு வந்து உங்களை எல்லாம் சந்திக்கின்ற, இந்த மையத்தைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பை அளித்த உங்களின் சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினர். எப்போது என்னைப் பார்க்க வந்தாலும், தனக்காக எதையும் அவர் கேட்டதே கிடையாது. அவரின் தொகுதிக்கு என்ன தேவை, தொகுதிக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று என்னிடம் கேட்டு, நிறையவே உங்களுக்குச் செய்து இருக்கிறார். சட்டமன்றத்திலும் சிறப்பாக செயல்படக்கூடிய உறுப்பினர்.

இதில் எனக்கு என்ன பெருமை என்றால், இன்றைக்கு கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று, இன்று 6 வருடம் முடிந்து, 7வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறேன். இந்த 6 வருடத்தில் என் பணிகளை, என்னால் முடிந்த அளவிற்குச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறேன் என்றால், அது உங்களின் மாவட்டப் பொறுப்பாளர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள், உங்களின் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எபினேசர் போன்ற நல்ல தளகர்த்தாக்கள் என்னுடன் இருப்பதால்தான். எனவே, வடசென்னையில் இவ்வளவு சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஆர்.டி.சேகர் அவர்களுக்கும், எபினேசகர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரிம்ஸ் மூர்த்தி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்தியாவில் முதன்முறை

இந்தியாவிலேயே முதன்முதலில் மகளிர் சுயஉதவிக்குழுவை ஆரம்பித்தது தமிழ்நாடுதான். அதை ஆரம்பித்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு இந்தியா முழுவதும் சுயஉதவிக் குழுக்கள் இருக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில் முதன்முறையாக ஆரம்பித்தார். அதன் பிறகு, அப்போது அமைச்சராக இருந்த நம் கழகத் தலைவர், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மணிகள் நின்று கொண்டே உங்களுக்கான கடன்தொகையை எல்லாம் கொடுத்து இருக்கிறார்.



### அடையாள அட்டை

இப்போது அந்தத் துறைக்கு நான் அமைச்சராக வந்து ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று உங்களை எல்லாம் சந்தித்து, உங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் செய்துகொண்டு இருக்கிறோம். சென்ற மகளிர் தினத்தன்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுகூட சுயஉதவிக் குழுக்களின் கோரிக்கைதான். நகர் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொருட்களை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்குத் தனியாகக் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்று சொன்னவுடன், தலைமைச் செயலாளரை அழைத்து, வெகுவிரைவில் உங்களுக்கு எல்லாம் ஒரு அடையாள அட்டைக் கொடுக்கப் போகிறார்கள். அந்த அடையாள அட்டையை வைத்துக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு லக்கேஜ்ஜை அரசுப் பேருந்துகளில் எடுத்துச் செல்லலாம் என்று முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பார்த்து, பார்த்துச் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்றால், உங்கள் மீது இருக்கின்ற நம்பிக்கையில்தான். அரசு எப்படி உங்களுக்குத் துணை நிற்கிறதோ, நீங்கள் இந்த அரசிற்கு துணை நிற்பீர்கள் என்று நம்புகிறேன்.

தலைவர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும், குறிப்பாக மகளிருக்கும், மாணவிகளுக்கும் பார்த்து பார்த்து செய்து கொண்டு இருக்கிறார். அதற்கு ஒரேயொரு உதாரணம் மட்டும் சொல்கிறேன். நம் முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவர் போட்ட முதல் கையெழுத்தே உங்களுக்கான கையெழுத்துதான். அதுதான் மகளிருக்கான விடியல் பயணம் திட்டம்.

### கடமை பொறுப்பு

இந்த நான்கு வருடங்களில் 730 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறீர்கள். அதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி. இப்படிப் பல்வேறு திட்டங்களைப் பார்த்து பார்த்துச் செய்கின்ற நம் திராவிட மாடல் அரசிற்கும், நம் முதலமைச்சர் அவர்களுக்கும் நீங்கள் அனைவரும் பக்கபலமாக, துணையாக இருந்து, அடுத்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் நம் தலைவர் அவர்களைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்த வேண்டிய கடமை, பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்பதை உரிமையோடு கேட்டுக்கொள்கின்றேன். மிக அருமையாக அமைந்திருக்கிறது ஆர்.கே.நகர் அச்சீவர்ஸ் அகாடமி. உள்ளே இருக்கின்ற வசதிகளை எல்லாம் பார்க்கும்போது, என் தொகுதியில் இன்னும் நன்றாகச் செய்ய வேண்டும் என்று ஆசை ஏற்படுகிறது. எனவே, இந்தப் பயிற்சி மையம் உங்களுக்குப் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

சென்னை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் ஜோயல், சட்டமன்ற உறுப்பினர்கள் எபினேசர், ஐட்ரிம்ஸ் மூர்த்தி, வெற்றிவீரன், வழக்கறிஞர்கள் அணி மாநில துணைச் செயலாளர் மருது கணேஷ், பகுதி கழகச் செயலாளர்கள் ஜெபதாஸ் பாண்டியன், லட்சுமணன், மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி கணேஷ், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர், லோகேஷ், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பொன் இளவரசன், ரவிக்குமார், கௌதமன், லயோலா மதன், கட்பீஸ் சோமு, கழகத்தின் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, வட்டக் கழகச் செயலாளர் தேவன், மாமன்ற உறுப்பினர் விமலா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சத்யநாராயணன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக், ஹரிக்குமார் உள்பட ஏராளமான கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

### தருமபுரி மேற்கு மாவட்டம்

#### தருமபுரி கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ஐ.நவீனா கொண்டகரஅள்ளி திப்பிரெட்டிஅள்ளி அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் - 635704.

துணை அமைப்பாளர்கள் - 1) த.காஞ்சனா த.குளியனூர் கிராமம் ஏ. கொல்லஅள்ளி அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் 2) த.கங்கா கொண்டகரஅள்ளி திப்பிரெட்டிஅள்ளி அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் 3) மு.சுலோச்சனா மஞ்சநாயக்கன் தண்டா, வே.முத்தம்பட்டி அஞ்சல் தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 4) ம. தெய்வாணை கிழவன் கொட்டாய், அன்னசாகரம் அஞ்சல் தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 5)) ம.கவிதா சிக்கம்பட்டி காலனி, வே.முத்தம்பட்டி அஞ்சல் தருமபுரி வட்டம் (ம) மாவட்டம்

#### தருமபுரி வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - த.சுதா கந்தன்கொட்டாய் கிராமம் அக்கமனஅள்ளி அஞ்சல் தருமபுரி வட்டம் (ம) மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) மு.மகேஸ்வரி கந்தன் கொட்டாய் கிராமம் அக்கமனஅள்ளி அஞ்சல் தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 2) கோ.மஞ்சுளா 1-1 புதூர் கிராமம் வெள்ளாளப்பட்டி அஞ்சல் தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 3) மா.கந்தம்மாள் மூக்கனூர் கிராமம் மற்றும் அஞ்சல், தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 4) மு.ரத்னா குப்பூர் கிராமம் மற்றும் அஞ்சல் தருமபுரி வட்டம், மாவட்டம் 5) க.முருகம்மாள் சின்னகுரும்பட்டி கிராமம், குப்பூர் அஞ்சல், தருமபுரி வட்டம், மாவட்டம்

#### தருமபுரி தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - கி.அமுதா ஆட்டுகாரன்கொட்டாய், மாரவாடி அஞ்சல், தருமபுரி வட்டம் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) வ.ராஜேஸ்வரி புழுதிக்கரை கிராமம் (ம) அஞ்சல், தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 2) சொ.மங்கம்மாள் அண்ணாநகர் கிராமம், நாயக்கன்கொட்டாய் அஞ்சல், தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 3) பீ.சரசு குட்டூர் கிராமம், நாயக்கன்கொட்டாய் அஞ்சல், தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 4) செ.கோமதி சீராம்பட்டி கிராமம், கிருஷ்ணாபுரம் அஞ்சல், தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் 5) ரா.ஆனந்தலட்சுமி சீராம்பட்டி கிராமம், கிருஷ்ணாபுரம் அஞ்சல், தருமபுரி வட்டம் (ம) மாவட்டம்

#### மொரப்பூர் கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - சே.கண்ணகி கர்தான்குளம் கிராமம் ஆர்.கோபிநாதம்பட்டி அஞ்சல் அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) தி.சித்ராதேவி அண்ணல் நகர் கிராமம் மொரப்பூர் அஞ்சல் அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம் 2) ரா.சரிதா எம்.தொப்பம்பட்டி, எலவடை அஞ்சல் அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம் 3) ர.முஜிதா போளையம்பள்ளி கிராமம் மற்றும் அஞ்சல் அரூர் வட்டம் தருமபுரி மாவட்டம் 4) க.சரண்யா தாசிரஅள்ளி கிராமம் மற்றும் அஞ்சல் அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம் 5) அ.காந்திமதி கெரகோடஅள்ளி கிராமம் மற்றும் அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம்

#### மொரப்பூர் மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ர.பழனியம்மாள் வகுரப்பம்பட்டி கிராமம், ஈச்சம்பாடி அஞ்சல், காரிமங்கலம் வட்டம் தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) பி.அகல்யா செங்குட்டை கிராமம், ஈச்சம்பாடி அஞ்சல், காரிமங்கலம் வட்டம் தருமபுரி மாவட்டம் 2) கோ.மாரி திம்மனூர் கிராமம், கொங்கரப்பட்டி அஞ்சல் காரிமங்கலம் வட்டம் தருமபுரி மாவட்டம் 3) பெ.சத்யா ஈச்சம்பாடி கிராமம் மற்றும் அஞ்சல், காரிமங்கலம் வட்டம் தருமபுரி மாவட்டம் 4) பா.ஜெரினா இருமத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், காரிமங்கலம் வட்டம் தருமபுரி மாவட்டம் 5) சி.புனிதா முல்லைநகர் கதிர்நாயக்கனஅள்ளி ஊராட்சி தருமபுரி மாவட்டம்

#### கடத்தூர் கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - மு.மாலதி குருபரஅள்ளி பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) பெ.சுமதி தாளநத்தம் அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் 2) கா.குணவதி சிந்தல்பாடி காலனி சிந்தல்பாடி அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம்

3) ச.சித்ரா டி.அய்யம்பட்டி தாளநத்தம் அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் 4) ஜானகி சூரப்பட்டி காலனி சந்தப்பட்டி அஞ்சல் அரூர் வட்டம் தருமபுரி மாவட்டம் 5) கா.பச்சையம்மாள் வகுத்துப்பட்டி அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம்

#### கடத்தூர் மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - இ.சர்மிளா புதுப்பட்டி கிராமம் ஒசஅள்ளி, இராணிமூக்கனூர் அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) ரா.பொன்னி புதுப்பட்டி கிராமம் ஒசஅள்ளி இராணிமூக்கனூர் அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் 2) ம.அம்சா ரேகட அள்ளி அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் 3) ரா.மரகதம் தாஸ் நகர் லிங்கநாயக்கன அள்ளி கிராமம் வெங்கடதாரஅள்ளி அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம்

4) மூ.ராஜேஸ்வரி தேக்கல்நாயக்கன்பட்டி, புளியம்பட்டிஊராட்சி சில்லாரஅள்ளி அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம் 5) மு.மகேஷ்வரி ஜாலியூர் ரேகடஅள்ளி அஞ்சல் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தருமபுரி மாவட்டம்

#### காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - சி.புனிதா நாகசமுத்திரம், எ.முருக்கம்பட்டி அஞ்சல் காரிமங்கலம் வட்டம்,தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) ரா.சத்யா கரகப்பட்டி, பந்தாரஅள்ளி அஞ்சல் காரிமங்கலம் வட்டம்,தருமபுரி மாவட்டம் 2) ஹ.தீபா ஜடையன்கொட்டாய், எ.சப்பாணிப்பட்டி அஞ்சல், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம் 3) ந.கலைவாணி கூடகாரன்கொட்டாய், எ.சப்பானிப்பட்டி, காரிமங்கலம் வட்டம்,தருமபுரி மாவட்டம் 4) ர.கௌசல்யா முருகன்கொட்டாய் கொங்குசெட்டிப்பட்டி, மாட்லாம்பட்டி அஞ்சல் காரிமங்கலம் வட்டம்,தருமபுரி மாவட்டம் 5) கு.கலைவாணி பெரியாம்பட்டி காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம் 6) சு.நாகேஸ்வரி வெகாலன்கொட்டாய் கெரகோடஅள்ளி, காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம்

#### பாப்பிரெட்டிபட்டி பேரூர்

அமைப்பாளர் - - கோ.நிரோஷா அலமேலுபுரம் பாப்பிரெட்டிப்பட்டி அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) மு.மெராஜ் மேல்தெரு பாப்பிரெட்டிப்பட்டி அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி மாவட்டம் 2) கா.வனிதா சமத்துவபுரம், பாப்பிரெட்டிப்பட்டி அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி மாவட்டம் 3) இள.சிவகாமி மூப்பனார் கோவில் தெரு பாப்பிரெட்டிப்பட்டி அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி மாவட்டம்

#### பொ.மல்லாபுரம் பேரூர்

அமைப்பாளர் - மா.ஜீவா வினோபாஜி தெரு, பொ.மல்லாபுரம் தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) மு.சின்னபொன்னு பில்பருத்தி, பொ.மல்லாபுரம் தருமபுரி மாவட்டம் 2) ச.ராகினி பண்டாரசெட்டிப்பட்டி பொ.மல்லாபுரம் தருமபுரி மாவட்டம்

3) ர.லட்சுமி பண்டாரசெட்டிப்பட்டி பொ.மல்லாபுரம் தருமபுரி மாவட்டம்

#### கம்பைநல்லூர் பேரூர்

அமைப்பாளர் - ப.செங்கொடி அம்பேத்கர் தெரு, கம்பைநல்லூர் அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) சி.ரோஜா தேவரெட்டியூர், வெதரம்பட்டி, கம்பைநல்லூர் அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம் 2) மு.பஞ்சமணி பூமிசமுத்திரம், கம்பைநல்லூர் அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம் 3) சு.தீபா கோல்டன் தெரு, கம்பைநல்லூர் அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்

#### கடத்தூர் பேரூர்

அமைப்பாளர் - ச.ராணி காந்திநகர் கிராமம், கடத்தூர் அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) கோ.பிரியா 19/1இந்திரா நகர் கிராமம், கடத்தூர் அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம் 2) செ.குணம்மாள் பெருமாள் கோவில் தெரு, கடத்தூர் அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம் 3) ஜ.சுபியா புட்டிரெட்டிப்பட்டி ரோடு, கடத்தூர் அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம்

#### அரூர் பேரூர்

அமைப்பாளர் - க.வினோதினி அம்பேத்கார் நகர் கிராமம், அரூர் அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி, மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) ச.பிரியா மேல்பாட்சாப்பேட்டை, பிள்ளையார் கோயில் தெரு, அரூர் அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி, மாவட்டம் 2) சீ.அம்பிகா 55, ஆத்தோர வீதி, அரூர் அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி, மாவட்டம் 3) கோ.மணி உடையானூர் அரூர் அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி, மாவட்டம். 4) ஜா.சம்சாத் மேல்பாட்சாப்பேட்டை அரூர் அஞ்சல், வட்டம், தருமபுரி, மாவட்டம் 5) ஆர். செல்வி 5-301 பெரியார் நகர் அரூர் அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி, மாவட்டம் 6) க.ருக்மணி 65 பருத்தி சொசையிட் எதிர் 1வது வார்டு அரூர் அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி, மாவட்டம்

#### மாரண்டஅள்ளி பேரூர்

அமைப்பாளர் - சை.ஷாகிதாபேகம் மாரண்டஅள்ளி, தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) ச.ஜனனி மாரண்டஅள்ளி, தருமபுரி மாவட்டம் 2) ர.ஜெயகொடி மாரண்டஅள்ளி, தருமபுரி மாவட்டம் 3) ர.சீதாலட்சுமி மாரண்டஅள்ளி, தருமபுரி மாவட்டம் 4) ஆ.அமுதா மாரண்டஅள்ளி, தருமபுரி மாவட்டம்

#### பாலக்கோடு பேரூர்

அமைப்பாளர் - ரா.மணிமேகலை புதுப்பட்டாணியர் தெரு, பாலக்கோடு தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) மு.முருகம்மாள் புதுப்பட்டாணியர் தெரு, பாலக்கோடு தருமபுரி மாவட்டம் 2) ச.தீபா அருந்ததியர் தெரு, பாலக்கோடு தருமபுரி மாவட்டம் 3) செ.சின்னபாப்பா பள்ளிகூடத்தான் காலனி பாலக்கோடு தருமபுரி மாவட்டம்

4) கா.கனகவள்ளி சாவடி தெரு பாலக்கோடு தருமபுரி மாவட்டம் 5) பா.சித்ரா மாரியப்பசெட்டி தெரு, பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்

#### காரிமங்கலம் பேரூர்

அமைப்பாளர் - மு.சாந்தி காட்டுசீகலஅள்ளி கிராமம், காரிமங்கலம் அஞ்சல் மற்றும் வட்டம் தருமபுரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) பெ.ஜெயலட்சுமி ராமபுரம் ரோடு, காரிமங்கலம் அஞ்சல் (ம) வட்டம், தருமபுரி மாவட்டம் 2) மு.கீதா அகரம் ரோடு அருகில், காரிமங்கலம் அஞ்சல் மற்றும் வட்டம் தருமபுரி மாவட்டம் 3) ம.பிரியங்கா 4/71,ராமசாமிகோயில் பின்புறம், காரிமங்கலம் அஞ்சல் (ம) வட்டம் தருமபுரி மாவட்டம் 4) ல.சம்சாத் மேல்தெரு, காரிமங்கலம் அஞ்சல் (ம) வட்டம் தருமபுரி மாவட்டம்

**குறிப்பு : பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு, பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு, பாப்பிரெட்டிப்பட்டி மத்திய, அரூர் கிழக்கு, அரூர் மேற்கு, அரூர் வடக்கு, அரூர் தெற்கு, பாலக்கோடு மேற்கு, பாலக்கோடு மத்திய, பாலக்கோடு தெற்கு, காரிமங்கலம் மேற்கு, காரிமங்கலம் மத்திய ஆகிய ஒன்றியங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-07-2025.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி